**மெத்தும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 11 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 22 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மெத்தும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணக்கமின்மை

கணக்குகள் தயாரிக்கும் போது, அட்டுறு அடிப்படை கடைபிடிக்கப்பட வேண்டும். எனினும் சுற்றாடல் அனுமதிப் பத்திர வருமானம் மற்றும் நீதி மன்றத் தண்டப் பணம் தொடர்பாக காசு அடிப்படை பயன்படுத்தப்பட்டிருந்தது.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 50,062,828 இற்கான அட்டுறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) கூட்டுத்தொகை ரூபா 3,421,054 இற்கான நிலுவை வருமானக் கடன்பட்டோர் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 29,036 இற்கான பலவின கடன்பட்டோர் நிலுவை என்பன மூலதன உதவி என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) கணக்கீட்டுக் குறிப்பு ஒன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய சபைக்கு உரித்தாக்கப்படாத ரூபா 8,490,000 தொகை பெறுமதியான 03 வாகனங்களின் பெறுமதி, மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 19 திகதி நன்கொடை ஒன்றாக சபைக்கு கிடைத்திருந்த உரிமை மாற்றப்பட்டிருக்காத Fonton Drump Truck வண்டி நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபபாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி, பேரேட்டுக் கணக்கின் மீதி மற்றும் மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்களில் காணப்படும் மீதிகளுடன் இணக்கஞ் செய்யும் போது ரூபா 338,823 இற்கான இணக்கமின்மையொன்று வெளிப்படுத்தப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 பெற வேண்டிய கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 59,120,689 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் ஒரு வருட காலத்தை மிகைத்துள்ள கணக்குகளில் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,161,110 ஆகக் காணப்பட்டது.

1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 62,615,154 தொகையால் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,350,848 ஆகும்.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கூட்டுத்தொகை ரூபா 44,116,216 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை | |
| நி.பி. 104 | இலக்கம் 252-6479 கொண்ட டபள்கப் வண்டி 02 சந்தர்ப்பங்களில் விபத்துக்கு உள்ளாகி ரூபா 74,850 செலவிடப்பட்டு திருத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கான ஆரம்ப விசாரணை ஒன்று மீளாய்வாண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2000 இன் 53 ஆம் இலக்கம் மற்றும் 1988 இன் 56 இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் அதன் கீழான 2008 ஜனவரி 25 ஆந் திகதிய இலக்கம் 1533/16 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2013 திசெம்பர் 13 திகதிய இலக்கம் 1841 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் | அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டிய வகையான 39 கைத்தொழில்களுக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கியிருக்கவில்லை. இதன் காணரமாக பொது மக்களுக்கு பீடைகள் ஏற்படக் கூடிய வகையில் முறை சாரா விதமாக கைத்தொழில்கள் நடத்துவதற்காக இடமளிக்கப்பட்டிருந்தது. அத்துடன் சபைக்கு பெறக் கூடியதாக இருந்த வருமானத்தையும் இழந்துள்ளது. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,652,343 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,211,899 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 9,559,556 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வீத வரி

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 2,122,080 இற்கான வீதவரி நிலுவை மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 1,525,172 ஆகும். ஆண்டின் போது அறவீடுகளின் சதவீதம் நிலுவையில் நூற்றிற்கு 18 மற்றும் சிட்டையிடல்களில் நூற்றிற்கு 63 ஆகும். 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 2,325,510 தொகை ஒன்று அவதானிக்கப்பட்டது. அம் மீதியில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 2,038,162 இற்கான மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 3,449,349 இற்கான நிலுவை வாடகை காணப்பட்டதுடன் இந்த பணத்தினை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 757,400 இற்கான நிலுவை வாடகை மீதியொன்று காணப்பட்டதுடன் ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 1,380,000 ஆகும். அவற்றில் மீளாய்வாண்டின் போது முறையே நூற்றிற்கு 6 மற்றும் நூற்றிற்கு 12 உம் அறவீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 1,922,036 தொகை ஒன்று காணப்பட்டது.

2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

முன்னைய ஆண்டின் போது வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டண சிட்டைகள் போடப்படாமையால் வருட ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை கட்டணம் அறிவிக்கப்படவில்லை. மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 114,850 இற்கான நிலுவை மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன், 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு அம் மீதியில் ரூபா 60,850 தொகை மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2.2.4 நீர்க் கட்டணம்

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 1,066,182 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது சிட்டையிடப்பட்டவைகள் ரூபா 1,635,464 ஆகும். அவற்றில் ஆண்டின் போது அறவீடுகள் முறையே நூற்றிற்கு 50 மற்றும் நூற்றிற்கு 64 ஆகக் காணப்பட்டமையால் ஆண்டு இறுதியில் நிலுவை ரூபா 1,101,452 ஆகும். இம் மீதியில் இருந்து 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 713,877 ஆகும். இம் மீதியில் இருந்து மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. அந்த நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை ஒன்றினை செயற்படுத்தியிருக்கவில்லை.

(ii) சபையினால் நடாத்தப்படும் 05 நீர்த் திட்டங்களின் மூலம் 214 நீர் தொடர்புகள் மீது நீர் மானிகள் பொருத்தியிருக்கவில்லை.

2.2.5 ஏக்கர் வரி

-------------------

ரூபா 80,540 இற்கான ஆரம்ப நிலுவைத் தொகைக்கு ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 35,204 ஆக காணப்பட்டதுடன், அந்த வருமானம் அறவீடு செய்யப்பட்டுள்ள சதவீதம் நூற்றிற்கு 8 மற்றும் 18 ஆகும். மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 107,587 இற்கான நிலுவை தொகை ஒன்று வெளிப்படுத்தப்பட்டதுடன், அம் மீதியில் இருந்து 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 79,392 இற்கான மீதியொன்று தொடர்ந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.6 தொலைத்தொடர்பு செலுத்துகை டவர்கள்

-------------------------------------------------------------------

2009 முதல் 2014 வரையான காலப் பகுதியில் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 24 செலுத்துகை டவர்கள் தொடர்பாக வருடாந்த வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. அத்துடன், 2009 ஆண்டு முதல் மீளாய்வர்ணடு வரை மொத்தம் ரூபா 321,000 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது. சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அங்கீகாரம் பெற்றிருக்காத 09 செலுத்துகை டவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை செலுத்தத் தவறியமையால் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த நிலுவை மீதி ரூபா 2,618,611 ஆகும்.

(ஆ) சபையில் காணப்படும் 82 பதவியணி பதவிகளில் 10 வெற்றிடங்கள் காணப்பட்டன. தொழிநுட்ப அலுவலர், காவலாளி மற்றும் நூலக ஊழியர்கள் ஆகிய 3 பதவிகளில் மிகையும் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது அங்கீகாரம் ஏதும் இன்றி ஆள் சேர்க்கப்பட்டிருந்த 21 பிரதியீட்டு ஊழியர்களுக்காக ரூபா 3,038,539 தொகையொன்று சம்பளங்கள் மற்றும் படிகள் என செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார எல்லையில் செயற்படாமையின் விளைவாக 2015 மே 30 திகதி வரை வெளி நபர்களினால் சபைக்கு எதிராக 19 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் போது இனங்கண்டிருந்த 19 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளில் 15 தொடர்பாக எதுவித சட்ட நடவடிக்கையும் கடைபிடித்திருக்கவில்லை. 02 அங்கீகாரம் அற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக தண்டப் பணம் ஏதம் அறவிடப்படாமல் சட்ட ரீதியாக்குவதற்காக செயற்பட்டுக் காணப்பட்டது.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்பட்டுள்ள ரூபா 1,026,860 இற்கான நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதியொன்று மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஓய்வுபெற்றுள்ள, சேவையை விட்டு நீக்கிய, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 19 அலுவலர்கள் மற்றும் ஊழியர்களிடம் சுமார் 10 ஆண்டுகள் காலம் முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 39,867 இற்கான கடன்மீதிகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 05 நூலகங்களில் இருந்து வெளியே வழங்கியிருந்த ரூபா 22,505 தொகை பெறுமதியான 83 புத்தகங்களை மீண்டும் நூலகத்திற்கு

ஒப்படைக்காமல் 03 மாதம் முதல் 12 மாதம் வரை காலத்தை விஞ்சியிருந்த போதிலும், இது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் கடைபிடித்திருக்கவில்லை.

3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-----------------------------------------------

சபைக்குச் சொந்தமான 10 நூலகங்களில் ரூபா 40,225 இற்கான 625 புத்தகங்கள் பற்றாக்குறை ஒன்று காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 104 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

--------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உக்கக் கூடிய மற்றும் உக்காதவை என வகைப்படுத்தப்படாமல் நாளாந்தம் சேகரமாகும் குப்பைகள் தெல்தெனிய சந்தை வளவிற்கு அண்மையிலுள்ள காணி ஒன்றில் குவிக்கப்பட்டிருந்ததுடன், முறையான குப்பை முகாமைத்துவ முறைமை ஒன்றினை சபை இது வரை ஆரம்பித்திருக்கவில்லை.

(ஆ) மேற் கூறிய இடத்தில் குப்பைகள் குவித்தலுக்கு எதிராக பொது மக்களின் எதிர்ப்பு ஏற்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக தெல்தெனிய நீதிவான் நீதி மன்றில் இலக்கம் 25193 கொண்ட வழக்கு விசாரணை நடைபெறுகின்றது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

--------------------------------------------------------------------

4.1 கூட்டிணைந்த திட்டம்

------------------------------------

மீளாய்வாண்டின் போது சபையினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பெறுகைகள் திட்டம்

-----------------------------------

ரூபா 108,085,610 இற்கான மூலதன செலவுகள் சபையினால் மேள்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்காமையால் குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை.

4..4 அகக் கணக்காய்வு

---------------------------------

மீளாய்வாண்டின் போது சபையினால் அகக் கணக்காய்வு திட்டமானது தயாரித்திருந்த போதிலும் அதனை அமுல் நடத்த்தியிருக்கவில்லை.

4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 04 வருமான விடயங்களில் நூற்றிற்கு 28 முதல் நூற்றிற்கு நூறு மிகைத்தும், 08 செலவு விடயங்களில் நூற்றிற்கு 14 முதல் நூற்றிற்கு 70 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன், பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்